சார்பு நீதிமன்றம், பெருந்துறை

OS No: 26/2018

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 14 நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 14.07.2025

Pw1 (பாலகிருஷ்ணன்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் தாக்கல் செய்துள்ள கிரய ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சிகள் என்றால் ஈஸ்வரமூர்த்தியின் மனைவி செல்வி, முத்துகுமாரசாமி, மற்றும் ரவிசந்திரன். முத்துகுமாரசாமி மற்றும் ரவிசந்திரன் ஆகியோர் சார் பதிவாளர் முன்பு சாட்சிகளாக இருந்துள்ளனர். நான் பாக்கி 50 ஆயிரம் தொகையை அன்றே செலுத்தி கிரயம் பெற்றுக் கொள்ள முயற்சிக்கவில்லையா என்றால் சாட்சி பிரதிவாதி சொத்து கடனில் இருப்பதாகவும் அதை செலுத்தினால் தான் கிரயம் செய்ய முடியும் என சொன்னதால் கால நிர்ணயம் நிர்ணகிக்கப்பட்டது. ஒரு வருட காலக் கெடுவிற்குள் சொத்தின் அசல் கிரய பத்திரம் என்னிடம் ஈஸ்வரமூர்த்தி ஒப்படைத்துள்ள நிலையில் சொத்தை கிரயம் செய்ய நான் முயற்சிக்கவில்லையா என்றால் அவர் தனக்கு விடுப்பு இல்லை எனவும், விடுப்பு வரும்போது சொல்வதாகவும் அப்போது கிரயம் ஏற்படுத்திக் கொள்ளலாம என்றுசொன்னதாக பதிலளிக்கிறார். நான் கிரயம் செய்து கொள்ள அவரிடம் கேட்டு வந்தேன். நான் இந்த வழக்கில் பாக்கி கிரயத் தொகையை நீதிமன்றதில் வைப்பீடு செய்துள்ளேன். நான் ஒப்பந்தத்தில் கண்ட தொகை நான்கு லட்சத்தினை யார் முன்னிலையில் கொடுததேன் என்றால் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கொடுத்தேன். இடம் விற்பனை செய்வதாக யார் மூலம நான் பேசினேன் என்றால் நானும் 1 ம் பிரதிவாதியுமே நேரடியாக பேசிக் கொண்டோம். 1 ம் பிரதிவாதி என்னிடம்

சொத்தை விற்பனை செய்யும் எண்ணத்துடன் பணம் வாங்கவில்லை என்றும், அவரின் அடமான கடனை தீர்ப்பதற்காக தான் பணம் வாங்கினார் என்றால் சரியல்ல. கடனிற்காக ஏற்பட்டதால் தான் ஒரு மாதம கழித்து அசல் பத்திரத்தையும் பெற்று வைத்துக் கொண்டேன் என்றும், கிரய எண்ணத்துடன் இருந்திருந்தால் நான் அவ்வாறுசெயல்பட்டிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் வாங்கிய தொகையை திரும்ப செலுத்த தயாராக உள்ளார் என்றும், நான் நிலத்தை அபகறிக்க வேண்டி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மோசடி மற்றும் துர்லாம் பெற வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.07.14 17:34:27 +0530

Subordinate Judge,
Perundurai.